**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**

**S.C.No.95/2022**

**Deposition of Witness for : P.W.19**

**Name :** மருத்துவர் திரு. பரந்தாமன்

**Father's Name :**

**Village :**

**Taluk :**

**Caste :**

**Calling :**

**Religion :**

**Age :**

எதிரி ஆஜர்.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 21.02.2024.**

முதல் விசாரணை -

நான் தற்போது ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் கல்லீரல் மற்றும் இரைப்பை அறுவை சிகிச்சை பிரிவில் உள்ளுறுப்பு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.10.2021 அன்று வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அடுக்கம்பாறையில் அறுவை சிகிச்சை பிரிவில் உதவி பேராசிரியராக பணியிலிருந்த போது புருஷோத்தமன், வயது 40, உள்ளுறுப்பு நோயாளி அடையாள எண்.71784 என்பவர் 70 சதவீத

தீக்காயங்களுடன் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அன்று காலை அவருக்கு மரண வாக்குமூலம் வாங்கும் பொருட்டு நீதிபதி இருதயமேரி அவர்கள் காலை 11.50 மணியளவில் மரண வாக்குமூலம் பெறுவதற்கு முன்பு நோயாளியின் நிலையை குறித்த சான்று வழங்க பணி மருத்துவராக இருந்ததால் நான் வழங்கினேன். மரண வாக்குமூலத்திற்கு முன்பும் பின்பும் நான் வழங்கிய மருத்துவச் சான்றுகள் முறையே அ.சா.ஆ.17 மற்றும் அ.சா.ஆ.18-ஆக ( மரண வாக்குமூலத்தின் மருத்துவ சான்று மட்டும் ) குறியீடுச் செய்யப்படுகிறது.

மருத்துவச் சான்றில் நோயாளி சுயநினைவுடன் சூழ்நிலைகளை புரிந்துக் கொண்டு பதில் அளிக்கும் தகுந்த மனநிலையில் உள்ளார் என்பதை உறுதி செய்த பின்னர் சான்று வழங்கினேன். என்னுடைய சான்றிற்கு பிறகு நீதித்துறை நடுவர் அவர்கள் புருஷோத்தமன் என்பவரிடம் மரண வாக்குமூலம் பதிவு செய்தார். பணி மருத்துவர் என்பதால் நான் நீதித்துறை நடுவருடன் உடன் இருந்தேன்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-

இந்த வழக்குச் சம்மந்தமான இதற்கு முன்பு எந்தவொரு காவல் அதிகாரியும் என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். நோயாளியின் தகுதிச் சான்றுக்கென தனியான ஒரு படிவம் உள்ளது என்றால் அது ஒரு குறிப்பிட்ட தேவைக்காக வழங்கப்படுவது ஆகும். புருஷோத்தமன் எப்போது எங்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்றால் நான் வழங்கிய ஆவணத்தின் அடிப்படையில் மேற்படி புருஷோத்தமனை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மருத்துவர் வேறு

ஒரு பணி மருத்துவர், அதனடிப்படையில் காலை 3.00 மணி அளவில் என்று தெரிந்துக் கொண்டேன்.

நான் புருஷோத்தமனை பார்ப்பதற்கு முன்பு சுமார் 6 மணி நேரத்திற்கு முன்பிலிருந்து அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். 70 சதவீத தீக்காயம் மற்றும் தீக்காயத்திற்கான சிகிச்சையில் கொடுக்கப்பட்ட மருத்து மற்றும் மாத்திரைகளால் சிகிச்சைக்கு வந்த நபர் மிகுந்த வலியின் காரணமாகவும், சிகிச்சையின் தன்மையினாலும் டெலியூசன் நிலையில் இருந்திருப்பார் என்றால் டெலியூசன் நிலையில் இருப்பதற்கு வாய்ப்பில்லை. சூழ்நிலை அறிந்து பதில் அளிக்க கூடிய நிலையில் தான் புருஷோத்தமன் இருந்தார்.

புருஷோத்தமன் டெலியூசன் நிலையில் தான் இருந்திருப்பார் என்றாலும், நான் சட்ட மருத்துவியலுக்கு எதிராக நான் தவறாக சான்றிதழ் வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய சான்றானது நீதிபதி பதிவு செய்ய இருந்த மரண வாக்குமூல பதிவிற்கு முன்பு அதே தாளில் 2வது பக்கத்தில் நான் சான்று வழங்கியுள்ளேன் என்றால் சரிதான்.

அ.சா.ஆ.17 மற்றும் 18 ஆகியவற்றை நான் தான் எழுதினேன் என்றால் சரிதான், இரண்டும் ஒரே நேரத்தில் எழுதப்பட்டது என்றால் முதலில் ஒன்றும், நீதித்துறை நடுவர் அவர்களின் பதிவிற்கு பிறகு ஒன்றும் எழுதப்பட்டது. முதல் சான்றிற்கும் இரண்டாம் சான்றிற்கும் இடையே எவ்வளவு இடைவெளி இருக்கும் என்றால் சுமார் 15 நிமிடங்கள் இருக்கும்.

இரண்டாவது சான்றில் நான் காலை 11.50 மணியிலிருந்து பகல் 12.05 மணி வரை என்று காட்டியுள்ளேன் என்றால் சரிதான். நேரம் 11.50ல்

திருத்தம் உள்ளது என்றால் சரிதான். புருஷோத்தமனின் கால் கட்டை விரலின் ரேகை பதிவு வைக்கப்பட்டதாக என்னுடைய 2வது சான்றில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், அதற்கு காரணமும் சான்றில் சொல்லியுள்ளேன், காரணம், தீ விபத்தில் கைகளின் ரேகை வெந்து போய் வீக்கமாக இருந்ததால் கைரேகையும் பெற முடியவில்லை, கையொப்பமும் பெற முடியவில்லை.

நீதித்துறை நடுவர் அவர்கள் எவ்வாறு, யாருடைய அழைப்பின் பேரில் அரசு மருத்துவமனைக்கு வந்தார் என்ற கேள்விக்கு நீதிமன்றம் கேள்வியை சம்மந்தம் இல்லாதது என்று மறுக்கப்பட்டது. இன்றைய தேதி விசாரணையிலும் வாக்குமூலம் பதிவு செய்த தினத்தில் பதிவு செய்த நீதித்துறை நடுவரை எங்கள் மருத்துவமனையிலிருந்து வரவழைத்ததற்கான எந்த ஆதாரமும் நான் பார்க்கவில்லை என்றால் இந்த கேள்வியும் சம்மந்தமில்லாதது என்று நீதிமன்றத்தால் மறுக்கப்பட்டது.

புருஷோத்தமனுக்கு நான் சிகிச்சை அளித்தேனா என்றால் நானும் அளித்தேன். அவருக்கு ஏற்பட்டிருந்த தீக்காயங்கள் பொதுவாக விறகு கட்டை நெருப்பில் விழுந்து உருண்டிருந்தாலும் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் எந்தவகை நெருப்பினாலும் தீக்காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. இந்த வழக்குச் சம்மந்தமாக போலீசார் மரண வாக்குமூலத்திற்கு சற்று முன்போ, அதற்கு முன்போ மருத்துவமனைக்கு வந்தார்களா என்றால் என்னுடைய பணி நேரத்தில் வரவில்லை. என்னுடைய பணி நேரம் என்பது ஆவணங்களின் அடிப்படையில் தான் சொல்ல முடியும்.

**<u>நீதிமன்ற கேள்வி -</u>**

**<u>கேள்வி 1-</u> பொதுவாக தீ விபத்தில் வரும் நபருக்கு மரண வாக்குமூலம் பதிவு செய்வதற்கு யார் எங்கள் மருத்துவமனையிலிருந்து அறிவிப்பு கொடுப்பார் என்றால்**

**<u>பதில்</u> - தீவிர சிகிச்சை பிரிவு மருத்துவர் தான் வேண்டுகோள் கொடுப்பார்.**

**<u>கேள்வி 2-</u> இந்த வழக்கில் நான் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேனா என்றால்**

**<u>பதில்</u> - ஆவணங்களை பார்த்து தான் சொல்ல முடியும்.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd./ K. Vijaya,
Additional Sessions Judge,
Arani.